அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை.—(குறள்.)

"From Wisdom's vaunted lore what doth the learner gain
If as his own he guard no other's souls from pain."

TIT-BITS OF ANIMAL LIFE.

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES.

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் V.] JUNE, 1905–௵ ஜூன். [இலக்கம் 2.

நமக்கு நட்பாகிய பறவைகள்.

பக்ஷிகளே யில்லாவிட்டால் இவ்வுலகம் என்ன கதியா யிருக்குமென்பதை நம்மில் எவராயினும் ஆலோசித்துப் பார்த்திருப்பார்களா? பக்ஷிகள் காதுக்கு இன்பமாகப் பாடிக்கொண்டு கண்ணுக்கு இனிய காட்சியாயிருக்கின்றன என்பதைப்பற்றி நாம் இப்போது சொல்ல வரவில்லை; மனிதர்களுக்குப் பறவைகளாலுண்டாகும் உபகாரத்தைப் பற்றி ஆலோசித்துப் பார்ப்போம். பயிர் புல் பூண்டு வகைகளை யழித்து அதிகமாய் உபத்திரவம் செய்கிற பூச்சி புழுக்களோடு மனிதர் எப்போதும் போராடவேண்டியது அவசியமாயிருக்கிறதல்லவா? இந்தவிஷயத்தில் பறவைகளாலுண்டாகும் அனுகூல மெவ்வளவென்பதைப் பற்றிச் சற்று விசாரிப்போம். வானத்தில் ஸஞ்சரிக்கும் இந்தச் சிறிய நல்ல ஜந்துக்களால் மனிதஜாதிக்கு உண்டாகும் உதவிகளை ஒவ்வொருவரும் கண்டறிந்து கொண்டாடத் தலைப்படுவார்களானால், இப்போது காட்டுப் பக்ஷிகளை வீணுக்கு வதைசெய்து பாபத்தைத் தேடுகிற பொல்லாங்கு அநேகமா யொழிந்துபோகுமென்று நாம் உறுதியாய்ச் சொல்லலாம். இந்த விஷயத்தைப்பற்றிப் பல ஸஞ்சிகைகளும் புத்தகங்களு மெழுதப்பட்டிருக்கின்றன; அதனால் நன்மைகளும் அநேகமாய் உண்டாகி வருகின்றன. ஆனாலும், நமது நட்பாளிகளாகிய பக்ஷிகள் நமக்குத் தெரியாமலே நமக்குச் செய்துவரும் உபகாரம் இப்படிப்பட்டதென்பதை இன்னும் அநேகர் தெரிந்துகொள்ள வேண்டியவர்களாயிருக்கிறார்கள்.

இக்காலத்திலேகூடப் பயிர்த்தொழிலாளிகள் பூச்சிகளோடு அடிக்கடி போராடும் போராட்டம் அநேகமாய்ப் பூச்சிகளுக்கே ஜயமாக முடிகிறது. இந்த விஷயத்தில் பக்ஷிகள் செய்யும் ஒப்பற்ற உதவி பயிர்த்தொழிலாளிகளுக்கு இல்லாவிட்டால், அவர்களுக்கு இன்னும் அதிகமான கேடுவந்து ஸம்பவித்திருக்கும்; பறவைகள் முற்றும் ஒழிந்து போனால், கடைசியில் அவர்கள் காரியம் எந்தவிதமாக முடியுமோ அதை நாம் இப்போது சொல்வது அஸாத்தியம்.

பருந்துமுதலான பெரிய பக்ஷிகள்.

பயிர்த்தொழிலாளிகளுக்கு மிகவும் உபயோகமாயிருக்கிற பருந்து கழுகு ஆந்தை முதலான பக்ஷிகளை அவர்கள் அதிகமான பகை பாராட்டிக் கண்ணெதிரே கண்டமாத்திரத்தில் அடித்தோட்டுவது மிகவும் அக்கிரமமானது. அவற்றில் ஏதோ சில ஜாதி தங்களுடைய கோழி முதலானவைகளை இம்சிக்கிறதென்கிற ஒரே காரணத்தைக்கொண்டு அவர்கள் அந்தப் பறவைகளை வெறுக்கிறார்கள்; அவற்றால் உண்டாகும் நன்மையைச் சற்றும் ஆலோசிப்பதில்லை. இப்பக்ஷிகளெல்லாம் அநேகமாய்ப் பயிருக்கு அழிவுசெய்யும் பூச்சிகளைப் பிடித்துத் தின்று ஒப்பற்ற உதவி செய்பவைகளாம்.

மரத்துளைச்சி.

இந்தப் பெரிய பக்ஷிகள் மாத்திரமேயல்ல; காக்கையொன்று தவிர மற்றப் பக்ஷிகளிடத்தில் அநேகமாய்ப் பகைகொண்டு அவற்றையும் கண்ணில் காணக்கூடா தென்கிறார்கள். அதற்குக் காரணம் அவற்றால் உண்டாகும் நன்மை இப்படிப்பட்ட

தென்பதை அவர்கள் தெரிந்துகொள்ளாமையே யாம். முதலில் மரத்துளேச்சி என்கிற பக்ஷியைப் பற்றிச் சிறிது ஆலோசிப்போம். இச்சிறு பறவை மரங்களைக் குத்தி அழிக்கிறதென்று அதனிடத்தில் அநேகர் கெட்ட எண்ணம் கொண்டிருக்கிருர்கள். ஐயோ! அது செய்யும் நன்மையை ஒருவரும் தெரிந்துகொள்வதில்லையே! அது என் அப்படி மரத்தைக் குத்துகிறது? அந்த மரத்தினுள்ளே ஒருவகைப் புழு உண்டாகி அம்மரத்தை அரிக்கிறது. அங்கே அந்தப் புழு இருப்பதை இயற்கையறிவால் மரத்துளேச்சி தெரிந்துகொண்டு அதைக் குத்தியெடுத்துத் தின்றுவிடுகிறது. அது அப்படிச் செய்யாவிட்டால், அந்த மரம் அந்தப் பூச்சிகளால் அரிக்கப்பட்டு அடியோடு பட்டுப்போகுமே! இப்படியே இலைகளையும் காய்களையும் பழங்களையும் அரிக்கும் பூச்சிகள் பலவுண்டு. அவைகளையும் அநேகம் பக்ஷிகள் பிடித்துத் தின்று பெரிய உபகாரம் செய்கின்றன.

பழங்களைத் தின்னும் பக்ஷிகள்.

பழங்களையே தின்னும் பக்ஷிகளும் பலவுண்டு. மரங்கள் பிஞ்சுவிட்டுக் காய்க்க ஆரம்பித்தால், உடனே அவை அம்மரங்களில் போய்ச் சேர்ந்து பிஞ்சுகளையெல்லாம் கறித்து அழிக்கின்றனவென்று பலர் பழிகூறுகிருர்கள். அந்தப் பக்ஷிகளால் தமக்கு உண்டாகும் உதவியை அவர்கள் சிறிதும் கவனிப்பதில்லை; அவை அக்காலத்தில் காய்கனிகளை மாத்திரமே யருந்துவதில்லை; காய்கனிகள் புழுத்து உபயோகமற்றுப்போகச் செய்யும் பல பூச்சிகளையும் பிடித்துத் தின்னுகின்றன; மற்றக் காலத்தில் அம்மரங்களிலுள்ள பூச்சி புழுக்களையே பிடித்துத் தின்று ஜீவிக்கின்றனவென்ருல், அந்தப் பக்ஷிகள் பொல்லாதவையென்று பழிக்கத்தக்கவையோ? மேலும், அப்பக்ஷிகள் தோட்டக்காரர்களுக்குச் செய்யும் உபகாரத்திற்கு, அவை தின்னும் காய்கனிகள் மிகவும் சொற்பமான கூலியென்பது என் அபிப்பிராயம். இவ்விஷயத்தைப் பயிர்த்தொழிலாளிகள் எவ்வளவு சீக்கிரத்தில் தெரிந்து கொள்ளுகிருர்களோ, அவ்வளவுக் கவ்வளவு அவர்களுக்கு நன்மையாம் என்று ஒரு பண்டிதர் சொல்லுகிருர்.

அநேகம் பூச்சிகள் செடி கொடிகளின் குருத்துகளையும் அரும்புகளையும் கறித்து மேலே வளரவொட்டாமல் மொட்டையாக்குகின்றன; பல பூச்சிகள் இலைகளைச் சுருட்டிக்கொள்ளும்படி செய்து அரிக்கின்றன. அப்படிப்பட்ட பூச்சிகளையே உணவாகக்கொண்ட பக்ஷிகள் அநேகம் படைக்கப்பட்டிருக்கின்றன வென்ருல், அப்பக்ஷிகளிடத்தில் நாம் எவ்வளவு நன்றியுள்ளவர்களாகவேண்டும்?

குஞ்சுகளுக்குப் பறவை உணவு ஊட்டுதல்.

பல பக்ஷிகள் முக்கியமாய்ப் பூச்சிகளைப் பிடித்துத் தின்கிற காலம் அவை முட்டையிட்டுக் குஞ்சுபொரித்துக் குஞ்சுகளை வளர்க்கும் ஸமயமேயாம். அக்காலத்தில் அவைகள் அழிக்கும் பூச்சிகள் இம்மாத்திரமென்று அளவிட்டுச் சொல்ல நம்மால் முடியாது. ஏனென்ருல், பறவைக் குஞ்சுகளுக்கெல்லாம் உணவு அந்தப் புழுக்களேயாம். தானியங்களைத் தின்னும் மனிதர்களுக்குக் குழந்தைப் பருவத்தில் பால் உணவாவதுபோல், தானியங்களையே தின்று ஜீவிக்கும் பக்ஷிகளுக்கும் குஞ்சாயிருக்கும்பொழுது உணவு இந்தப் புழுக்களேயாம்.

பக்ஷிகளால் அழிக்கப்படும் புழுக்களை ஒருவாறு கணக்கிடுதல்.

இதைப்பற்றி ஒருவர் சொல்லுவதாவது:—ஒரு சமயத்தில் நான் பார்த்துக்கொண்டிருக்கையிலே, ஆணும் பெண்ணுமான இரண்டு பாடும் குருவிகள் கூட்டில் நிறைந்திருந்த தம் குஞ்சுகளுக்கு உணவு தேடிவந்து கொடுத்துக்கொண்டிருந்தன. அவை என்ன செய்கின்றனவோ பார்ப்போமென்று நான் நாலைந்து மணிநேரம் அவைகளையே உற்றுப்பார்த்துக்கொண் டிருந்தேன். அக்காலத்தில் ஆணே பெண்ணே, எதாவது ஒரு பக்ஷி இரண்டு நிமிஷத்திற்கு ஒருதரம் அக்குஞ்சுகளுக்கு உணவு தேடிக்கொண்டு வந்தது; அவ்வுணவு மற்றொன்றுமல்ல, பூச்சி புழுக்களேயாம். இப்படி ஒருநாளைக்குப் பதினன்குமணி நேரம் வீதமாக, அக்குஞ்சுகள் வளர்ந்து சிறகு முளைத்துத் தாமே இரைதேடிக்கொள்ளும் பருவம் வருமளவும், அவைகளுக்கு உணவு ஊட்டவேண்டுமென்ருல், எவ்வளவு பூச்சிகள் வேண்டுமோ, ஆலோசித்துப் பாருங்கள். ஒரு பக்ஷிக்கே இப்படியானல், இன்னும் எத்தனையோ பக்ஷிகள் இருக்கின்றனவே; அவைகளும் இதேவிதமாகத் தம் குஞ்சுகளுக்கு உணவு ஊட்டவேண்டுமல்லவா? ஆகவே, எவ்வளவு பூச்சிகள் அழிக்கப்படுமென்பதைச் சற்று நாம் இதைக் கொண்டு பரியாலோசிப்போமானல், மனிதர்களுக்கு அவை செய்யும் உபகாரம் இவ்வளவென்பதை நாம் அளவிட முடியுமோ? காக்கை முதலான பக்ஷிகளும் இப்படிப்பட்ட நல்லுதவிகள் செய்கின்றன என்கிருர்கள். இப்படிப்பட்ட பக்ஷிகளைப்பார்க்கிலும் நமக்கு நன்மைசெய்யும் நண்பர் வேறுண்டோ? இவைகளையோ நாம் பகைத்து இம்சிப்பது?

"அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த வுடம்பு."—குறள்.

இறகுக்காகப் பக்ஷிகளைப் பிடிப்பதனால் வந்த கேடு.

மேனாட்டுப் பெருமாட்டிகள் பக்ஷி இறகுகளை அலங்காரமாகப் பல வருஷங்களாய்த் தரித்து வந்த விபரீதம் இப்பொழுது ஜீவ ஹிம்ஸை நிவாரண சங்கத்தாரால் அநேகமாய் அடக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கேட்க மிகவும் சந்தோஷமாயிருக்கிறது. ஆனால் அந்தக் கேடு அப்பெண்களின் அறியாமையால் உண்டானதேயொழிய, இரக்க மில்லாமையால் உண்டான தல்லவென்று உறுதியாய்ச் சொல்லலாம். இதைப்பற்றி நாம் முன் பல ஸஞ்சிகைகளில் சொல்லியிருக்கிறோம். இந்த அழகான இறகுள்ள பக்ஷிகள் சில வருஷங்களுக்குமுன்னே அளவற்றிருந்ததாகவும், அவ்விடத்தில் இப்பொழுது ஒரு பக்ஷிகூடக் காண்பதற்கு அருமையாகி விட்டதாகவும், தேசாந்தர யாத்திரை செய்தவர் ஒருவர் சொல்லுகிறார். தாம் சிரவில் தரித்துக்கொள்ளும் ஒரு சிறிய இறகுக்காக இவ்வளவு பக்ஷிகள் அநியாயமாய்க் கடுங்கொலை செய்யப்பட்டன வென்பதை நெஞ்சுருக்கமுள்ள பெண்பாலார் கேட்டால், பிறகு அவர்கள் அச்சிறகைத் தலையில் தரிக்கவேண்டுமென்கிற ஆசைகொள்வார்களோ?

இந்தப் பக்ஷிகளினிறகு அநேகமாய் முட்டையிடுகிற காலத்திலே மிகுந்த அழகுள்ளதாயிருக்கும். ஆகையால், ஐயோ! அந்தச் சமயத்திலேதான் அந்தப் பக்ஷிகளை அழித்துவிடுகிறார்கள். இதைப் பற்றி யாத்திரைக்காரர் ஒருவர் சொல்லிப் பரிதபித்ததாவது,—'யான் முதல்தடவை அந்தக் காட்டுவழியாகப் போனபோது பறவைக் கூடுகளில் குஞ்சுகள் நிறைந்திருந்தன; அப்படிக் கூடுகளில் குஞ்சுகள் நிறைந்திருப்பதும், அழகான இறகுகளோடு கூடிய தாய்ப் பறவைகள் தம் குஞ்சுகளிடத்திற்கு அடிக்கடி போவதும்வருவதுமா யிருப்பதும் கண்ணுக்கினிய காட்சியாயிருந்தன; அதைவிட அழகான காட்சி வேறொன்றுமில்லை யென்றே சொல்லலாம். அப்படியிருக்க, மறுபடி ஒருவாரம் கழித்து நான் அவ்வழியாகத் திரும்பிவந்தேன். முன்னிருந்த அதிசயக்காட்சி அதற்குள் எவ்வளவு மாறுபட்டுப்போயிற்று அறிவீர்களோ? அந்தச் சமயத்தில் பக்ஷி இறகு சேகரிக்கும் வேடன் அவ்விடத்திற்கு வந்தான்போலும்; பெரிய பக்ஷிகள் ஒன்றுகூடக் கண்ணுக்குப் புலப்படவில்லை; அப்பொழுதும் கூடுகளில் குஞ்சுகள் நிறைந்திருந்தன; ஆனால் அவையெல்லாம் அநேகமாய்ச் செத்தவையும் சாகப்போகிறவைகளுமா யிருந்தன. ஆ! ஒரு வாரத்திற்குள் பெரியவையும் சிறியவையுமாய் எவ்வளவு பறவைகள் தம் அருமையான உயிரை இந்த ஸ்திரீகளுடைய அலங்காரத்திற்காக இழக்கும்படி நேர்ந்தது பார்த்தீர்களா? இந்தத் துக்கக் காட்சியை எந்த ஸ்திரீயாவது கண்ணால் பார்த்திருப்பாளானால், மறுபடி அந்த இறகைத் தலையில் வைத்துக்கொள்ள வேண்டுமென்கிற ஆசைகொள்வாளோ?' என்கிறார்.

சில வருஷங்களுக்குமுன் இந்த அருமையான ஜீவன்களை இரக்ஷிக்க வேண்டுமென்கிற எண்ணமெவர்க்கும் அநேகமா யில்லாமலேயிருந்தது. இப்பொழுது நல்ல காலம் பிறந்திருக்கிறது. உலகத்தில் அநேகர் நல்ல விவேகமும் நாகரிகத் தேர்ச்சியும் பெற்று ஜீவகாருணியமுள்ளவர்களாய்ப் பிராணிகளைப் பாதுகாக்கப் பாடுபட்டு வருகிறார்கள். இயற்கையிலே இந்த அருமையான பக்ஷிகளுக்குப் பல சத்துருக்களுண்டு; அவைகளே போதுமானவை. நாமும் அவற்றைப் பிடிக்கவேண்டுமோ? நம்மாலானவளவு பாடுபட்டு அவற்றை அன்புடனே பாதுகாத்து வருவது நமக்குத் தருமமும் பெரும் பாக்கியமுமல்லவா?

நாமொருவர்க்கொருவர் அன்பு பாராட்டல்.

நாம் சொல்லாலாயினும் செய்கையாலாயினும் ஒரு ஜீவனையும் வருத்த நியாயமில்லை. இந்த உலகத்திலே நல்ல காரியங்களைச் செய்ய முயன்றபெண்களும் புருஷர்களும் பலர் முதலில் அநேகவிதமான கஷ்ட நஷ்டங்களை அனுபவித்திருக்கிறார்கள். ஒருவர் நன்மை செய்வதைப் பார்க்கப் பலர்க்குப் பொறாமை உண்டாகிவிடுகிறதாகையால், அவர் மேல் வீணான பழி பாவங்களைச் சொல்லத் தலைப்பட்டு அதைரிய முண்டாக்குகிறார்கள்; அன்றியும் அவர்மேல் பகைகொண்டு பல பொல்லாங்குகளும் செய்யத் தலைப்படுகிறார்கள். அதனால் உலகத்திற்கு நன்மை செய்யத் தொடங்குகிறவனுக்குத் தேகசவுக்கியம் குறைவுபட்டு வாழ்நாளும் குறுகிப் போகிறது. மற்றவர்கள் யாது சொல்லட்டும், என்ன செய்யட்டும்; நாம் ஒருவர்க்கொருவர் அன்பு பாராட்டி வருவோம்; நாம் சந்திக்கிற ஒவ்வொரு மனிதரிடத்திலும், சிறியதோ பெரியதோ, வலிவுள்ளதோ வலியற்றதோ, ஸகலமான ஜீவன்களிடத்திலும் பக்ஷமுள்ளவர்களாயிருப்போம். நாம் பக்ஷமுள்ளவர்களாயிருந்து அந்த நற்குணத்தை மற்றவர்களுக்கும் பழக்குவோம். துன்பங்களும் இடையூறுகளும் அதிகமாகி மிகவும் வருத்தப்படுகிற இந்த உலகத்தில் நன்மை உண்டாவதற்கு நல்ல ஸாதனம் அன்பும் அருளும் அதிகப்படுவதைப்பார்க்கிலும் வேறொன்றில்லை.

"அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு."—குறள்.

ஜந்துக்களைப்பற்றின அபூர்வ கதைகள்.

முதலையும் முயலும்.

இப்பூமண்டலத்தில் புதுமையானது ஒன்றுமில்லையென்று பண்டிதனா யிருப்பவன் சொல்லக்கூடும். ஆயினும், இதுவரையிலும் ஒருவரும் காதினாலும் கேளாத அதிசயங்கள் அநேகம் உலகத்திலே நடக்கின்றன. ஒரு ஆற்றோரத்திலே முதலையொன்று படுத்திருந்தது. காட்டு முயலொன்று அவ்விடம் வந்து அதை ஒரு மரக்கட்டையென்று நினைத்து அதன் வாலில் உட்காந்தது. அது தெரிந்த முதலை தக்ஷணமே தன் வாலைத் திடீரென்று வேகமாகச் சுழற்றி அந்த முயல் மேலே எழும்பும்படி செய்து உடனே தன் தலையை அதற்கு நேராகத் திருப்பித் தனது அகன்ற வாயினால் அதனைப் பிடித்துத் தின்றுவிட்டது. இது மிகவும் சாதுரியமான காரியமல்லவா? ஆயினும் இப்படியே எப்பொழுதும் முயல்கள் எமாறிப் போவதில்லை. மற்றொருதடவையில் பல முயல்கள் கூட்டங் கூடி வந்து ஒரு முதலையைப் படாதபாடு படுத்திவிட்டன. அம்முதலைக்குத் தன்னை அவை உயிரோடு விட்டால் போதுமென்றாயிற்று.

கழுகு நடுவீதிக் கொள்ளையடித்தல்.

மீன்குத்திப் புள் கடலிலிருந்து ஒரு பெரிய மீனைத் தன் மூக்கினால் குத்தி யெடுத்துக்கொண்டு மேலே கிளம்பி வருவதை ஒரு கழுகு காணுமானால், கழுகு அந்த மீனைத் தான் பறித்துக்கொள்ள வேண்டுமென்று அபேக்ஷைகொண்டு மீன்குத்திப் புள்ளின்மீது பாய்கிறது. அச்சிறு பறவை சற்றுநேரம் கழுகின் கையில் அகப்படாமல் தந்திரமாய்த் தப்பித்துக்கொள்ளுகிறது. ஆயினும் முற்றும் பெரிய கழுகுக்குத் தப்ப அதனாலாவதில்லை. கழுகு இன்னும் அப்படியே இரண்டொருதரம் மீன்குத்தியின்மேல் பாய்ந்து அதன் வாயிலுள்ள இரையைக் கீழே நழுவ விடும்படி வருத்துகின்றது அந்தச் சிறு பறவையின் வாயினின்று மீன் நழுவிய தக்ஷணமே கழுகு அதிவேகமாய் அதற்கு நேராகப் பாய்ந்து அது தண்ணீரைக் கிட்டுவதற்கு முன்னேயே அதைத் தன் மூக்கினால் பிடித்துக் கொண்டு போய்விடும். இப்படிப்பட்ட ஸாமர்த்தியம் மிகவும் கொண்டாடத்தக்கதல்லவா?

மிருகங்களுக்கு மனிதரிடமுள்ள அன்பு.

அமெரிக்காவிலே பூமா என்னப்பட்ட ஒரு வகைச் சிங்கமிருக்கிறது. அதற்கு மனிதரிடத்தில் அதிகமான அபிமானமுண்டென்று விசேஷமாய்க் கொண்டாடுகிறார்கள். அந்தச் சிங்கம் தான் மனிதனை யெதிர்க்காமலிருப்பது மாத்திரமேயன்று; மற்ற மிருகங்கள் மனிதனை யெதிர்க்காமலிருக்கும்படியாகவும் மனிதனைக் காப்பாற்றுகிறது. அதனால் அத்தேசத்தில் அந்த மிருகத்திற்கு மானிட நேசனென்று பெயரிட்டிருக்கிறார்கள். அந்த மிருகத்தினுடைய இந்த மேலான குணத்தைப்பற்றிய விசித்திரமான கதை யொன்று கேளுங்கள்: அத்தேசத்தில் ஒரு பாபமுமறியாத அழகிய ஒரு சிறு பெண்ணின்மேல் எதோ ஒரு பொய்க்குற்றம் சாட்டித் தண்டனை விதித்தார்கள்: அந்தத் தண்டனையாவது, அவளை நடுக்காட்டில் கொண்டுபோய் ஒரு மரத்தின்மேல் கட்டிவிடவேண்டுமென்பதாம். அவள் அப்படி அங்கேயே பட்டினி கிடந்தாவது சாகட்டும், காட்டு மிருகங்களுக்கு இரையாகியாவது உயிரிழக்கட்டு மென்பது அவர்கள் கருத்து அப்படியே அந்த உத்தரவு நிறைவேற்றப்பட்டது. அப்புறம் இரண்டுநாள் கழித்து, அவள் என்னவாயினாள், செத்துப் பிணமாய்க் கிடக்கிறாளா? போய்ப் பார்த்து வரும்படி வேலைக்காரர்கள் அனுப்பப்பட்டனர். வேலைக்காரர்கள் அவ்விடம் போய்ப் பார்க்கையில் அவள் உயிரோடு அப்படியே இருந்தாள்; உடம்பில் ஒருவிதமான சேதமுமுண்டாகவில்லை. காட்டு மிருகங்களொன்றும் அவளைத் தாக்காதபடி பூமா அவளைப் பாதுகாத்துக்கொண்டிருந்தது. அதுகண்டு தண்டனை விதித்த நியாயாதிபதி, இப்படித் தெய்வச்செயலாலே காப்பாற்றப்பட்டு அப்பெண்மணி குற்றமற்ற குணபூஷணியென்று தெரிவிக்கப்பட்டாளாதலால், தான் அவளைத் தண்டித்தது பிசகென்று தெரிந்து உடனே விடுதலை செய்தான். இப்படிப்பட்ட நல்ல பிராணிகளையோ நாம் இம்சிப்பது?

குதிரைவியாபாரி யொருவனது குறிப்புப் புத்தகத்தில் கண்டது.

சக்கரக்கட்டு அகலமாயிருந்தால், குதிரைக்கு வருத்தம் அதிகமில்லாதிருக்கும்.

நல்ல வண்டிக்காரர்கள் தங்களுடைய வாயில்லா ஜந்துக்களுடன் விசேஷமாகப் பேசுவார்கள்.

உங்களைப்பார்க்கிலும் உங்கள் குதிரைகளுக்குக் குடிக்கத் தண்ணீர் அடிக்கடி வேண்டும்.

வண்டி போகும் பாதை மணலாகவாவது மண்ணாகவாவது இருந்தால் குதிரைக்கு வருத்தம் அதிகமாகும்.

பாதை பத்தடி தூரத்தில் ஒரு அடி உயரமாயிருந்தாலும், அதில் வண்டியை இழுத்துக்கொண்டுபோவது குதிரைகளுக்கு இரட்டிப்பான வருத்தம் கொடுக்கும்.

சீறுமாறு செய்வதாலும், அதிகமான சுமை ஏற்றுவதனாலும், சேணத்தை அழுத்தமாகக் கட்டுவ

தனாலும், குதிரைகளுக்கு அடிக்கடி கூச்சமுண்டாகும்

சாட்டையை உபயோகிப்பதனால் நஷ்டமேயொழிய லாபமில்லை; சாட்டையைத் தூரவைத்துவிடுங்கள்.

நமது கல்விப்பயிற்சியில் ஜீவகாருணிய போதனையும் ஒருபாக மென்று ஏற்படுமானால், அப்பொழுதும் நல்ல நாகரிகத் தேர்ச்சிபெறப் பலர் வெகுகாலம் பயிலவேண்டும்.

மிருகங்களை யடைத்துவைக்கும் தோட்டங்களைப்பற்றிய சில ஆக்ஷேபங்கள்.

வாயில்லா ஜந்துக்களுடைய வருத்தங்களைப் பற்றிப் பிள்ளைகளுக்கு அதிகமாகக் கற்பிப்பதேயில்லை. துரதிர்ஷ்டப் பிராணிகளைப் பிடித்து அடைத்து நிர்ப்பந்தப் படுத்திவைக்கும் தோட்டங்களையே பிள்ளைகள் கல்விகற்கு மிடமென்று சொல்லுகிறார்கள். அங்கே அடைக்கப்பட்டிருக்கும் பல ஜந்துக்களைப் பார்த்துப் பிள்ளைகள் பல விஷயங்கள் தெரிந்துகொள்வார்களாம். ஆ! ஆ!! இது வெகு அழகு. ஒரு சிறு பிள்ளையை வெளியேவிடாமல் எப்போதும் ஒரு அறையிலேயே தள்ளி அடைத்துவைத்து, அதனால் அப்பிள்ளையின் சுபாவங்களை நாம் தெரிந்துகொள்ளலாமென்று சொல்வதுபோலவே யன்றோ இது விளங்குகிறது? கூட்டில் அடைக்கப்பட்ட நாய் பூனை முதலியவைகளையும், ஒரு சிறிய அறையில் அடைக்கப்பட்ட குதிரையையும் பார்த்து நாம் என்ன கற்றுக்கொள்ளக்கூடும்? ஒன்றும் கற்றுக்கொள்ள முடியாது. ஆகையால், இக்காலத்தில் மிருகாசயங்களையே வைத்திருக்கலாகாது. பிள்ளைகள் ஒவ்வொரு ஜீவனிடத்திலும் அன்பாயிருக்கவும், அவற்றின் சவுக்கியத்தைத் தங்களுடைய சவுக்கியம் போல நினைக்கவும் நன்றாகக் கற்பிக்கப்படும் பக்ஷத்தில், பிறகு அவை ஒருகால் ஏற்பட்டாலும் ஏற்படலாம். இந்த ஜீவகாருணியப் படிப்புப் பிள்ளைகளுக்குப் பாடசாலைகளிலும் மற்றும் பிரசங்கஞ் செய்யு மிடங்களிலுமே விருத்தியாகவேண்டும். இதைப்பற்றிப் பெற்றோர்கள் சிறிதும் கவலை கொள்வதேயில்லை; ஆனால், இப்பொழுது ஜீவகாருணியத்தைப்பற்றிக் கற்பிக்கப்படாத சிறுவர்கள் பிற்காலத்தில் கல்நெஞ்சர்களாகி மனிதர்களையும் மிருகங்களையும் அநேகமாய் இம்சிக்கத் தலைப்படுவதைப் பார்த்துத் துன்பப்படுகிறவர்களும், அதனாலுண்டாகும் கஷ்டநஷ்டங்களை யனுபவிப்பவர்களும் அப்பிள்ளைகளின் பெற்றோர்களேயாம். ஆதலால், பெற்றோர்களே பிள்ளைகளுக்கு ஜீவகாருணியத்தைப் போதிக்கப் பாடுபடவேண்டும்.

காட்டு மிருகங்களின் குணம்.

காட்டு மிருகங்கள் அநேகமாய் மூர்க்ககுணமுள்ளவை யென்று அநேகர் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனாலும், எந்தப் பிராணியினிடத்திலும் நாம் அப்படிப்பட்ட தப்பான அபிப்பிராயம் கொள்ளலாகாது. மிருகங்கள் காட்டில் தனியே யதேச்சையாய்ச் சஞ்சரிக்கும்போதுதானே நாம் அவைகளுக்கு இந்தத் துர்க்குணமிருப்பதாகச் சொல்லவேண்டும்? சுபாவத்தில் அவைகளுக்கு அப்படிப்பட்ட மூர்க்ககுணமே யில்லை; மனிதன் அவ்விடத்திற்குப் போய் அவைகளைப் பிடித்துப் பழக்கப் பிரயத்தனப்பட்டுக் கூட்டிலடைத்து நிர்ப்பந்தப்படுத்தினால், அந்த நிர்ப்பந்தம் அவைகளுடைய ஸஞ்சாரத்திற்கும் மனப்போக்குக்கும் ஒவ்வாமல் மூர்க்கம் செய்யத் தலைப்படுகின்றன; மேலும் அவை மனிதனைப் பார்த்து அவர்களிடமுள்ள துர்க்குணங்களைத் தாமும் அப்பியாசஞ் செய்துகொள்ளுகின்றன.

காட்டில் யானைகள் தம்மிஷ்டப்படிச் சுகமாய்த் திரியும்பொழுது ஒருகாலத்திலும் மூர்க்ககுணமுள்ளவையாகிறதில்லை; அதாவது, மிகுதியான வெறிகொண்டு தம்மினத்தைவிட்டுப் பிரிந்து அதிகமான எரிச்சலோடும் கோபத்தோடும் தனியே காட்டில் திரிந்து தம்மெதிரே வருகிற எந்தப் பிராணியையும் எதிர்த்துத் துன்பப்படுத்தத் தலைப்படுவதில்லை. காட்டிலுள்ள யானையைப் பிடித்துக் கூட்டில் அடைத்தால்தான் சில சமயம் அதற்கு இந்த மூர்க்ககுணமுண்டாகித் தன் அருகே வருகிற பாகன் ஒவ்வொருவனையும் வதைத்துக் கடைசியில் தானும் கொல்லப்படுகிறது. பலயானைகள் பெருங்கூட்டமாகக் கூடி ஒரே ஒழுங்காய்க் களிப்படைந்து காட்டில் ஸஞ்சரிப்பதைப் பார்க்கப் பேரானந்தமாயிருக்குமே!

ஆதலால், மனிதர்களுடைய ஸஹவாஸத்தினாலேயே மிருகங்களுக்கு மூர்க்ககுணம் அப்பியாஸமாகிறது; அதற்குக் காரணமெதுவானாலு மாகட்டும். காட்டிலே சுதந்தரமாகத் திரியும் பிராணிகள் தம்மினமாகட்டும் வேறு ஜாதி பிராணிகளாகட்டும், ஸகலமான ஜீவன்களிடத்திலும் ஸமாதானமாகவே சேர்ந்து வாழ்கின்றன வென்பதை யாவரும் பிரத்தியக்ஷமாகப் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம்.

ஜீவஜாதியின் ஸ்மரணங்கள்.

பிராணிகள் தமக்குள் எவ்விதமானவகையாய் இணைந்துவாழ்கின்றனவென்பதைப்பற்றி அதிகமாக விசாரித்துத் தெரிந்துகொண்டவர் ஒருவருமில்லை; இதற்குக் காரணம், அவற்றின் தன்மையைத் தாம் தெரிந்துகொள்ள வேண்டுமென்கிற உற்சாகமில்லாமையும், தமக்கு மிஞ்சினது மற்றொன்றுமில்லையென்கிற செருக்குமேயாம். பல்லாயிரம் வரு

ஷங்களாகச் சரித்திரக்காரர்களும் கவிராயர்களும் தத்துவசாஸ்திரிகளும் பிரயாணிகளும் நூலாசிரியர்களும் மனிதர்களுடைய நடையுடை பாவனைகளையும் பாஷைகளையும் ஸம்பாஷணைகளையும் எண்ணங்களையும் ஆலோசனைகளையும் சாமர்த்தியங்களையும் பலவிதமாகப் புகழ்ந்து பேசியிருக்கிறார்களாகையால், மனிதர்களுக்கு அத்தன்மையான செருக்கு உண்டாகிவிட்டதுபோலும். இப்படித் தம்முடைய பெருமைகளையே மேலாக மதித்துவருகையில், தம்மோடுகூட இவ்வுலகில் வாயில்லா ஜந்துக்களும் விசேஷமாக வஸித்துக்கொண்டிருக்கின்றன வென்பதை மறந்து தாம்மாத்திரமே வாழ்வதாகக் கருதினார்கள்போலும். மானிடர்தவிர மற்றச் சகலமான பிராணிகளும் மனிதருடைய உதவி சிறிதுமில்லாமல் தாமே மேலாக மகிழ்ந்து வாழும். கடல் மீனுக்கும் காட்டுமிருகங்களுக்கும் வானத்துப் பறவைகளுக்கும் மனிதருடைய உதவி எதுக்கு? அது அப்படியாக, வாயில்லா ஜந்துக்களுடைய உதவியில்லாமல் ஒரு நிமிஷமாயினும் மனிதர் இவ்வுலகில் வாழ்ந்திருக்க முடியுமோ? இப்படியிருக்க, நாம் அவற்றின் தன்மையைத் தெரிந்துகொள்ளாதிருப்பது தகுதியோ?

பாடசாலைப் பிள்ளைகளுக்கு ஒரு கடிதம்.

பூர்வீகருக்கிருந்த பூததயை.

இவ்வுலகிலே ஜீவஹிம்சை நிவாரண சங்கங்கள் ஏற்பட்டதும், பாடசாலைப் பிள்ளைகள் மாத்திரமேயன்றிப் பெரியோர்களும் தமக்குள்ள ஜீவகாருணியத்தை வெளியிடவேண்டிய விதமும் முன் ஸஞ்சிகையிலே சொல்லியிருக்கிறோம். பூர்வத்திலே நமது இந்துதேசத்திலும் பிறதேசங்களிலும் பலர் ஜீவகாருணிய முள்ளவர்களாகவே யிருந்தார்களென்பது, நமது தேசத்துப் புராதனமான தருமசாஸ்திரம் முதலியவைகளாலும், இங்கிலாந்து தேசத்துப் புலவர்கள் பலர் எழுதிய கவிகளாலும் நன்கு விளங்குகிறது. ஆனால், அப்படியே உலகத்தார் எல்லோரையும் வாயில்லாத ஜந்துக்களிடத்தில் அதிகமான அபிமான முள்ளவர்களாக்க அவர்கள் வேண்டிய முயற்சி எடுத்துக்கொள்ளாமையாலேயே இவ்வுலகம் இப்போதுள்ள நிலைமைக்கு வந்துவிட்டிருக்கிறது. 'ஒரு பிராணியையும் இம்சிக்கலாகாது' என்று நம்முடைய வேதம் முறையிடுகிறதே, ஜீவ காருணியப் பயிற்சிக்கு இதைவிட நல்ல உபதேசம் வேறென்னவேண்டும்? ஆனால், அந்த வேத வாக்கியத்தைத் தெரிந்துகொண்டவர் மிகவும் அருமையாம். ஆகவே, பலர் சொல்லி முறையிடுகிறபடி, இப்போது இவ்வுலகத்திலுண்டாகும் ஜீவஹிம்சைகளுக்கு முதற்காரணம் அநேகமாய் அறியாமையும் அவிவேகமுமே தவிர, உள்ளத்தில் இரக்கமும் உருக்கமுமில்லாமையல்ல. அதனாலேதான் இப்போது கண் தெரியாத பாடசாலைப் பிள்ளைகளுக்குக் கண் திறந்து ஜீவகாருணியத்தை உண்டாக்கப் பாடுபடவேண்டுமென்கிறது.

நமது சிறுவர் நல்லவராகிற வழி.

மனிதர்கள் முதல் முதல் கொடுமையைக் காட்டுவதற்கு இடம் வாயில்லாத எளிய ஜந்துக்களே. அவைகளைக் கொடுமைசெய்வது முற்றினால் அவர்கள் அப்படியே மனிதர்களையும் இம்சிக்கத் தலைப்படுகிறார்கள். அநேகம் குடும்பங்கள் சுக வாழ்க்கைக்கு இடமா யிருக்கவேண்டியது போய் எப்போதும் சண்டையும் சச்சரவுமாயிருப்பதற்குக் காரணமிதுவே. ஆகவே, மனிதர்களுக்காயினும் மிருகங்களுக்காயினும் இப்போது உண்டாயிருக்கிற உபத்திரவங்களை விலக்குவதற்கு மாத்திரமேயல்ல; இனி இப்படிப்பட்ட உபத்திரவங்கள் ஒருநாளும் உண்டாகாதபடி தடுக்க நாமெல்லாரும் ஒருமித்துப் பாடுபடவேண்டும். அதற்கு ஒவ்வொருவரும் தம்மைப்போலவே மற்றெல்லாப் பிராணிகளையும் பாராட்டுவதே பெரிய உபாயமாம். ஆகாயத்தில் பறக்கும் பறவைகளும், இப்பூமியில் ஸஞ்சரிக்கும் பிராணிகளும், தண்ணீரில் வாழும் நீர்வாழ் ஜந்துக்களுமாகிய ஜீவராசிகளெல்லாவற்றையும் படைத்தவர் ஸகல லோகரக்ஷகனான ஸர்வேச்வரனே யென்பதும், அவனே நம்மைக் காப்பாற்றுவது போலவே மற்றப் பிராணிகளையும் ரக்ஷித்து வருகிறானென்பதும் அநேகருக்குத் தெரிந்திருக்குமென்று எண்ணுகிறேன். அப்படி ஸ்வாமியினால் சிருஷ்டிக்கப்பட்ட ஜீவன்களை இம்சிப்பவர் தெய்வபக்தியுடையவ ராவார்களோ? அவைகளை இம்சிப்பவர் அவருடைய கோபத்திற்குப் பாத்திரராகிக் கடைசியிலே கொடிய நரகத்தில் தள்ளப்படுவார்களன்றோ? நமது சிறுவர்களெல்லாம் இப்படி நரகத்துக்கு ஆளாகாமல் நன்மைபெற்று வாழவேண்டு மென்பதற்காகவே, ஆதிமுதல் அவர்களுக்கு ஜீவகாருணியத்தைப் போதிப்பிக்க வேண்டுமென்று நாம் இப்போது முக்கியமாய்ப் பாடுபடுவது.

வாயில்லா ஜந்துக்கள் நம்மைப் போன்றவையே.

ஆகவே இப்பொழுது யாவரும் எளிய வாயில்லா ஜந்துக்களிடத்தில் அன்புள்ளவர்களா யிருக்கவேண்டியது மிகவும் அவசியம். வாயில்லா ஜந்துக்களைப்பற்றி நமக்கு விசேஷமாய் ஒன்றும் தெரியாது; அவை அநேகமாய் நம்மைப்போலவேயிருக்கின்றனவென்று மாத்திரம் நாம் உறுதியாய்ச் சொல்லலாம். நம்முடைய தேகம்போலவே அவைகளுடைய தேகமும் எலும்பு தசை மாமிசம் நாடி நரம்பு முதலியவைகளால் செய்யப்பட்டிருக்

கிறதென்பது மெய். நம்மைப்போலவே அவைக ளுக்கு ஐம்புல உணர்ச்சியும் சுக துக்கங்களும் நோவும் வருத்தமுமுண்டு; நாம் அன்பு பாராட்டி ளுல் அதைத் தெரிந்து களிக்கும் குணமுமுண்டு. நாம் அவைகள்விஷயத்தில் அன்பு பாராட்டிளுல், அதற்குப் பிரதி அவைகளும் நம்மிடத்தில் அன்பு பாராட்டும். சில ஸமயங்களில் நாம் தீமைசெய் தாலும் அப்போதும் நமக்கு நன்மையே செய்கிற நற்குணமுள்ள நல்ல பிராணிகளும் பலவுண்டு. இதற்குத் திருஷ்டாந்தமாய்ப் பல கதைகள் நீங் கள் படித்திருக்கலாம். மனிதர்களுக்கும் மற்றப் பிராணிகளுக்கும் விசேஷமான வித்தியாஸமுண் டென்று நெடுநாளாக நினைக்கப்பட்டிருந்தது. தேக தத்துவசாஸ்திரத்தைப்பரியாலோசனை செய்ததில், வர வர இவ்விரண்டும் மிகவும் நெருங்கிய சம்பந்த முள்ளவையென்று கண்டறியப்பட்டு வருகிறது.

கடவுள் படைப்பின் பெருமை.

நம்மைப் பிறப்பித்ததுபோலவே கடவுள் மற் றப் பிராணிகளையும் ஏதோ ஒரு காரியத்திற்காக வே படைத்திருக்கிருர் என்பதில் நமக்குச் சிறி தளவேனும் ஸந்தேகமுண்டோ! அந்தப் பிரயோ ஜன மின்னதென்று நமக்கு நன்ருகத் தெரியா விட்டாலும் அவர்க்கு நன்ருய்த் தெரியுமல்லவா? ஆ! அந்த ஒவ்வொரு பிராணியின் உருவமைப் பிலும் அவர் காட்டியிருக்கும் திறமை யெப்ப டிப்பட்டது சற்று ஆலோசித்துப் பாருங்கள். **கிப்பன்** என்னும் ஒரு சரித்திரக்காரர் ஒரு ஸம யத்தில் இதை மிகவும் வியந்து கூறியிருக்கிருர். அவர் கான்ஸ்தாந்திநோபில் நகரத்திலே கட்டப் பட்ட **ஸென்டுஸோபியா** என்னும் ஆலயத்தை விசேஷமாகப் புகழ்ந்து பேசிக் கடைசியில், 'இது தேவலோகம்போ லிருக்கிறதென்றும், இது தேவ நிர்மாணமோ என்று கொண்டாடத்தக்கதா யிருக் கிறதென்றும், இந்த ஆலயத்தினுள் பிரவேசிப்பவ னெவனும் பார்த்து வியக்கத்தக்கதா யிருக்கிறது' என்று கொண்டாடி, முடிவில், 'ஆ! இந்த ஆலயம் எவ்வளவு அதிசயமான கட்டடமா யிருந்தாலும், இதன் அடித்தரையில் ஊர்ந்துபோகிற ஒரு சிறு பூச்சியின் உடலமைப்புக்கு இது எள்ளளவேனு மொப்பாகுமோ? அதனோடு இதை ஒப்பிட்டுப் பார்க்குமளவில், இதற்காகச் செய்த யுக்தி யுபாயங் கள் அத்தனையும் உறக்கம் பிடித்தவையாயும் இதற்குப் பட்ட பாடுகளெல்லாம் பிரயோஜனமற்ற வையாயும் இருப்பதாக விளங்குகின்றனவன்ருே?' என்று கடவுளுடைய படைப்பான பிராணிகளின் பெருமையை உணர்ந்து மேலாகப் புகழ்ந்து பேசியி ருக்கிருர்.

வாயில்லா ஜந்துக்களின் நல்வாழ்க்கை.

இப்படி நமக்குத் தெரியாத பல புதுமைகளும் அதிசயங்களு மமைந்த பிராணிகளுக்கல்லவோ நீங்கள் யஜமானர்களா யேற்படுவது! அவைகள் விஷயத்தில் நீங்கள் ஒருபொழுதும் உபேக்ஷை செய்யாதேயுங்கள்! அவைகளுக்கு நீங்கள் செய்ய வேண்டிய கடமைகளை நன்ருகத் தெரிந்துகொள் ளுங்கள்! அன்ருடம் நம்முடைய உயிர்வாழ்க்கை அந்தப் பிராணிக ளில்லாவிட்டால் என்னகதி யாகிவிடும்; அவைகளில்லாவிட்டால் ஒரு நிமிஷ மேனும் நாம் இவ்வுலகில் வாழ்ந்திருக்கக்கூடுமோ? என்பதை முக்கியமாக ஆலோசித்துப் பாருங்கள். அந்தப் பிராணிகளுக்கோ, நம்மாலாகவேண்டியது ஒன்றுமில்லை; அவைகளுக்கு வேண்டிய ஸகல சௌக்கியங்களையும் இயற்கையில்தாமே கடவுள் அமைத்திருக்கிருர். காடுகளில் அநந்த கோடி ஜீவன்கள் வாழ்கின்றனவே, அவை நம்முடைய உதவியை அணுவளவேனும் அபேக்ஷிக்கின்றன வோ? அவைகளை இம்சியாதிருப்பதே நாம் அவை களுக்குச் செய்யவேண்டிய பெரிய உபகாரமாம். அப்படிச் சுகமாக வாழ்கிற ஜீவன்களை நாம் நமது சவுக்கியத்திற்காகப் பிடித்துவந்து நம்முடனே வா ழச்செய்து வருத்துவதனுலேயே, நாம் அவைகளி டத்தில் அதிகமான அபிமானமுடையவர்களாய் அன்புபாராட்டிவரக் கடமைப்பட்டிருக்கிருேம்.

ஜந்துக்கள் செய்யும் விநோத விகடங்கள்.

நாம் சிறிதளவு சிரமமெடுத்துக் கொள்வோ மானுல், பூனை நாய் முதலான பிராணிகளுக்கு விநோதமான விகடச் செய்கைகள் பல கற்பித்துக் கொடுக்கலாம். ஆளுல் சிறுபொழுதிலே பழக்க ஆரம்பிப்பது நல்லது. கை குலுக்கவும், கரணம் போடவும், கொம்பின்மேலேறிக் குதிக்கவும், கூத்தாடவும், மனிதனைப்போல இரண்டு காலால் நிமிர்ந்து நிற்கவும் பழக்கலாம்.

பூனைக்குக் கை குலுக்கப் பழக்குவது எப்படி யென்ருல், முதலில் அந்தப் பிராணியை உட்காரச் செய்து அதன் கையை நாம் பிடித்துக்கொண்டு 'கை குலுக்கு' என்று சொல்லி அதைச் சந்தோ ஷப்படுத்தவேண்டும். அப்படியே ஐந்தாறு தரம் செய்த பிறகு நீ உன் கையை நீட்டி 'கை குலுக்கு' என்று சொல்லுவாயாளுல், அது அந்தக் குறியைத் தெரிந்துகொண்டு தன் கையை உன் கைமேல் வைக்கும். அவ்வளவு சீக்கிரத்தில் அது இந்தக் குறிப்பைத் தெரிந்துகொள்ளாமற் போனுலும், முன்போலவே பின்னும் இரண்டொரு தடவை செய்து அதைத் தட்டிக் கொடுத்து அத்தருணத் தில் அதற்கு நல்ல உணவும் சிறிது கொடுத்து உற் சாகப்படுத்தினுல், அதிசீக்கிரத்தில் அச்செய் கையை அது நன்ருய்த் தெரிந்துகொள்ளும். அதேவிதமாகப் பிரதிதினம் செய்துவந்தால் அப் பொழுது அது அதற்கு நல்ல பழக்கமாகிவிடும்.

இப்படியே பூனை நாய் முதலியவைகளுக்கு நன்ருகப் படுத்துக்கொள்ளவும் பழக்கலாம். முதலில் நேராக நிற்கவைத்துப் பிறகு மெல்லப் படுக்க வைத்து, 'படுத்துக்கொள்' என்று நாம் வாயினுல் சொல்லிக்கொண்டே அதேவிதமாக ஐந்தாறுதரம் செய்யவேண்டும். 'எழுந்திரு' என்று நாம் உத்தரவு செய்தாலன்றி எழுந்திராமலிருக்கும்படி பண்ணவேண்டும். இப்படியே சிலநாள் வரையில் செய்து பழக்கி வந்தால், நாம் சொல்லுகிறபடியெல்லாம் செய்ய அவை நன்ருய்க் கற்றுக்கொள்ளும்.

குரங்குகள் அரிச்சந்திர நாடகம் ஆடுவதையும், நாயின்மேலேறிச் சவாரிபோவதையும், கொம்பின் மேலேறிக் குதிப்பதையும் இந்நகரத்து வீதிகளில் அநேகர் பார்த்திருக்கலாம். இப்படியே காடியைப் பிடித்துப் பலவிதமான விநோதங்கள் செய்யப் பழக்கி யிருக்கிருர்களல்லவா? பிச்சைக்கார தாசிரி தெருவில் பெருமாள் மாட்டைக் கொண்டுவந்து பிச்சை யெடுக்கிருனே! அந்த மாடு அவன் சொல்லுகிறபடியெல்லாம் செய்கிறதல்லவா? தனக்கு இஷ்டமானதைச் சொன்னுல் தலையசைக்கிறது; இஷ்டமில்லாததைச் சொன்னுல், அப்படியே அசையாமல் நிற்கிறது; விரோதமானதைச் சொன்னுல் ஓடிவந்து முட்டுகிறது; குழந்தைகளுக்குக் கிட்டவந்து முத்தங் கொடுக்கிறது; முன்னங்காலை முட்டியிட்டு வந்தனம் செய்கிறது. இவைகளெல்லாம் அப்பியாஸமல்லவா? ஆட்டக்காரர்கள் தங்கள் குதிரைகளையும், யானை வேங்கை சிங்கம் முதலியவைகளையும் தாம் சொல்லுகிறபடி ஆடப் பழக்கித் தாமும் மகிழ்ந்து மற்றும் பலரையும் பார்த்து மகிழச்செய்து, அதையே ஜீவனோபாயமாகவும் கொண்டிருக்கிருர்களல்லவா? பழக்கினுல் எப்படிப்பட்ட அருமையான வித்தையையும் கற்றுக்கொள்ளும் திறமை வாயில்லா ஜந்துக்களுக்கு விசேஷமாயிருக்கிறது. இப்படிப்பட்ட அருமையான வாயில்லா ஜந்துக்களையோ நாம் அன்புடன் ஆதரித்துக் காப்பாற்ருமல் பலவிதமாகத் துன்புறுத்தி வருத்தப்படுத்துவது!

குதிரைகளை நன்ருகக் காப்பாற்றும் முறை.

குளிர்ச்சியான கடிவாளம்.—சீதகாலத்திலே இரும்பு அல்லது எஃகினுல் செய்த கடிவாளத்தை முதலிலே கொஞ்சம் சூடாக்காமல் குதிரையின் வாயில் போடலாகாது; அப்படியே போட்டால், குதிரையின் நாக்குத் தோல் வழன்றுபோம். குதிரைகளைக் கையாளுகிறவன் எவனுகட்டும், பனி நாளில் காலையிலே இருப்புக் கடிவாளத்தைக் கையினுல் பிடித்துத் தனது நாக்கு நுனியில் வைத்துப் பார்க்கட்டும்; அதன்மேல் அவனுக்கு மனம் வந்தால் அதைக் குதிரையின் வாயில் போடலாம். மனிதரைப்போலவே குதிரைக்கும் நாக்கு மிகவும் நுட்பமானது; மனிதரைப்போலவே குதிரைக்கும் தேகத்தில் மிகவும் உஷ்ணமான பாகம் நாக்கு. ஆகையால் அந்த உபத்திரவம் நமக்கு எப்படியோ அப்படித்தானே குதிரைக்குமிருக்கும். அந்த நோவினுல் குதிரைக்குத் தீனி தின்பதும் வருத்தமாகிவிடுகிறது; அதுஅந்த நிமிஷத்தோடு போகாமல், அப்படியே பலநாளளவும் தொடர்ந்து தீனியின்மேல் அபேக்ஷையும் தேகபலமும் குறைகின்றன. இதே காரணத்தினுல் அநேகம் குதிரைகள் உபயோகமற்றவையாகின்றன.

தண்ணீர்.—நமக்குக் குடிக்க எப்படிச் சுத்தமான நல்ல தண்ணீர் வேண்டுமோ, அப்படியே தான் நமது குதிரைக்கும் நல்ல தண்ணீர் வேண்டுமென்பது உங்களுக்கு எப்போதும் ஞாபகமிருக்கட்டும். குதிரைகளுக்கு நம்மைப்பார்க்கிலும் உடனுக்குடனே தாகமெடுக்குமாகையால், அடிக்கடி அதற்குத் தண்ணீர் காட்டவேண்டும்.

உப்பு.— குதிரைக்குக் கொள்ளு முதலான தானியங்களுடன் அடிக்கடிக் கொஞ்சம் உப்பு சேர்த்துக்கொண்டுவந்தால், அதனிடம் அதிகமாய் நோய் அணுகாது.

ஆலோசனையும் பேச்சும். — குதிரையைச் சவுக்கால் அடிக்க முயல்வதற்கு முன்னே சற்று நன்ருய் ஆலோசித்துத் தட்டிக் கொடுத்துக் குதிரையுடன் அன்பாகப் பேசுங்கள்.

நல்லவண்டிக்காரன் பேச்சு.—நல்ல வண்டிக்காரன் ஒருவன் சொல்வதாவது:—நான் என்ன பேச்சுப் பேசினுலும் அதை என் குதிரை அறிந்துகொள்ளும். கோபத்துடனே பேசும் கடுஞ்சொற்கள் மனிதருடைய மனத்தை எப்படி வருத்துமோ அப்படியே, குதிரை, நாய், பூனை, பக்ஷி முதலியவைகளுடைய மனத்தையும் வருத்தப்படுத்தும்; உரத்துப் பேசும் கடுஞ்சொற்களால் சில பிராணிகள் திகில் அடைகின்றன; சில பிராணிகள் கோபித்து வெறி கொள்ளுகின்றன; சிலவற்றிற்கு நோயுண்டாகிவிடுகிறது. கோபமான உரத்தபேச்சினுல் சில பக்ஷிகள் மூர்ச்சையடையக் கண்டிருக்கிருர்கள்.

நீங்கள் குதிரைக்கு எவ்வளவு உணவு அளிக்கிறீர்களோ, அவ்வளவுக்குத் தக்கபடிதான் அதற்கு வலிவுண்டாகும்; அதிகம் கிடைக்காது.

பொறுமையும் அடக்கமுமுள்ள வண்டிக்காரர்கள் மற்றவர்களைப்பார்க்கிலும் இருமடங்கு அதிகமான உதவி செய்பவராகி நன்மைபெறுவார்கள்.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1905.